<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வாழப்பாடி.</u>

முன்னிலை :திரு. **S.V.** சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
வாழப்பாடி.

2026-ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 22-ஆம் நாள், புதன்கிழமை

<u>அசல் வழக்கு எண் 48/2020</u>

<u>(CNR No. TNSA1B-000254-2020)</u>

1. S.P. முருகன் (இறப்பு)
2. M. செல்வி
3. M. அஜித் குமார்
4. M. அசோக் குமார் .. வாதிகள்

எதிராக

M.R. ஜெயக்குமார் .. பிரதிவாதி

(இ.ம.வ.எண்.***188/2021***-ல் கடந்த ***13.07.2022*** அன்று பிறப்பித்த உத்தரவின்படி ***1***-ம் வாதி காலமாகிவிட்டார் என்றும், காலம்சென்ற ***1***-ம் வாதியின் வாரிசுகளான ***2*** முதல் ***4*** வாதிகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க அனுமதிக்கப்பட்டும், இ.ம.வ.எண்.***236/2022***-ல் கடந்த ***15.12.2022*** அன்று பிறப்பித்த உத்தரவின்படி வழக்குரையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ***)***

இவ்வழக்கானது கடந்த 22.07.2020 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 24.07.2020 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் மீதான விசாரணையானது, கடந்த 17.04.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, 1-ம் வாதி

இறந்துவிட்ட நிலையில், 2 முதல் 4 வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. J. பெரோஸ் அவர்களும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. ஜாகீர் அகமத் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

தீர்ப்புரை

பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ, வேலையாட்களோ தாவா 1-ம் அயிட்ட சொத்தில் எவ்வகையிலும் ஆக்கிரமிப்பு செய்து அதை தாவா 2-ம் அயிட்ட சொத்தோடு இணைக்க முற்படுவதை தடை செய்வதற்கும், மேலும் 1-ம் அயிட்ட சொத்தில் 5380 சதுரடியை தவிர இதர பகுதியில் வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கும், ஆளுகைக்கும் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கேட்டும், வழக்கின் செலவுத்தொகை கேட்டும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்குரை மற்றும் திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம் :

தாவா முதலாவது அயிட்ட சொத்தை 1-ம் வாதி கடந்த 14.12.2009-ம் தேதி ராமன் (எ) ராமசாமி வகையராவிடமிருந்து 0.38 செண்ட் நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளார். 1-ம் வாதி யாருடைய தொந்தரவும், இடைஞ்சலும் இல்லாமல் தாவா 1-வது அயிட்ட சொத்தை அனுபவித்து வந்தார். அவர் தன் பெயருக்கு வருவாய்த்துறை ஆவணங்களை மாற்றிக் கொண்டார். 1-ம் வாதி வாங்கிய 0.38 செண்ட் நிலத்தில் (தாவா 1-வது அயிட்ட சொத்து) அவர் கடந்த 01.04.2013-ம் தேதி 5380 சதுரடி நிலத்தை பிரதிவாதிக்கு ஆவண எண்.1883/2013 ஆவணத்தின் வாயிலாக சொத்தை விற்றுவிட்டார். அது தான் தாவா 2-வது

அயிட்ட சொத்தாகும். 1-ம் வாதி, பிரதிவாதிக்கு விற்ற சொத்தின் அளவு கிழமேலடி வடபுறம் 20, தென்புறம் 20, தென்வடலடி கிழபுறம் 268, மேற்குபுறம் 270 அடி இந்த அளவுதான் பிரதிவாதியின் பத்திரத்தில் தெள்ளத்தெளிவாக காட்டி எழுதப்பட்டுள்ளது. 1-ம் வாதிக்கு பாத்தியப்பட்ட 0.38 செண்ட் நிலத்தில் 5380 சதுரடிகள் போக மீதமுள்ள நிலத்தை இந்த பிரதிவாதி தாவா முதலாவது அயிட்ட சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யும் வரை 1-ம் வாதி யாருடைய தொந்தரவும், இடைஞ்சலும் இல்லாமல் அனுபவித்து வந்தார். கடந்த 06.12.2019-ம் தேதி வாழப்பாடி வட்டாட்சியர் அவர்கள் தாவா சொத்துக்களை பொறுத்து பட்டா மாறுதல் உத்தரவு செய்துள்ளார். மேற்படி பட்டாவில் ச.எண்.120/1A1, 120/1A2 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிக்கு 1-ம் வாதி சொத்தை விற்றது போக மீதியுள்ள நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்ய எவ்வித உரிமையும், அருகதையும் இல்லை. பிரதிவாதிக்கு 5380 சதுரடி நிலத்தில் தான் உரிமை கொண்டாட முடியும். ஆனால் பிரதிவாதி திடீரென்று அடியாட்களுடன் கடந்த 17.07.2020-ம் தேதி காலை 10.00 மணிக்கு தாவா முதலாவது அயிட்ட சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கத்தில் நிலத்தை சேதப்படுத்தினார். மேலும் தாவா 2-வது அயிட்ட சொத்துடன் சேர்த்துக்கொள்ள முயற்சிகளை செய்தார். இதை கேள்விப்பட்ட 1-ம் வாதி தாவா சொத்துக்கு உடனடியாக சென்றார். அங்கு உள்ளூர் பெரிய மனிதர்களின் துணையோடு பிரதிவாதியின் ஆக்கிரமிப்பு செயலை தடுத்து நிறுத்தினார். இருப்பினும் பிரதிவாதி தாவா முதலாவது அயிட்ட சொத்தில் உள்ள பயிர்களை சேதப்படுத்திவிட்டார். பிரதிவாதி வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்து பயிர்களை சேதப்படுத்தியதை போட்டோ எடுக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தாவா சொத்தைவிட்டு வெளியேறும்போது, தான் அதிகப்படியான அடியாட்களுடன் வந்து தாவா முதலாவது அயிட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்தே தீருவேன் என்று சபதம் செய்து சென்றார். பிரதிவாதிக்கு தாவா முதலாவது அயிட்ட சொத்தில் எந்தவிதமான உரிமையோ, பாத்தியமோ இல்லை. பிரதிவாதி 01.04.2013 தேதியிட்ட ஆவணத்தின் அடிப்படையிலும்,

எல்லைகளின் அடிப்படையிலும் தான் தாவா 2-வது அயிட்ட சொத்தை அனுபவிக்க முடியும். பிரதிவாதியின் செயலால் 1-ம் வாதி மிகவும் பயந்தும், பிரதிவாதியின் மிரட்டலால் தாவா முதலாவது அயிட்ட சொத்தை முழுமையாகவும், சுதந்திரமாகவும் அனுபவிக்க முடியவில்லை. பிரதிவாதியின் ஆக்கிரமிப்பு செயல்கள் கனம் நீதிமன்ற உத்தரவால் மட்டுமே கட்டுப்படுத்த முடியும். தாவா நிலுவையில் இருக்கும்போது 1-ம் வாதி காலமாகிவிட்டார். அவரின் வாரிசுகள் 2 முதல் 4 வாதிகள் ஆவோம். 2 முதல் 4 வாதிகள் ஆவார்கள். இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்ந்துள்ளோம். எனவே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம் :</u>

நான் மேற்படி வழக்கில் பிரதிவாதியாவேன். இவ்வழக்கில் வாதி என் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட தாவா சங்கதிகள் யாவும் விரோத மனப்பான்மையிலும், சட்டப்படியாக ஏற்றுக்கொள்ள முடியாத மற்றும் நிலைக்கத்தகாத மற்றும் பொய்யான சங்கதிகளை கொண்ட தாவா ஆகும். வாதி தனது தாவா பத்தி 4-ல் கூறியுள்ள சங்கதிகளில் வாதி 0.38 செண்ட் நிலத்தை வாங்கினேன் என்று கூறுவதை நான் மறுக்கிறேன். அது ஏற்றுக்கொள்ள முடியாததும், பொய்யானதும் உண்மைக்கு புறம்பானதும் ஆகும். அதை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வாதி எனக்கு விற்ற நிலம் பத்திரப்படியும் அதில் கண்டுள்ள செக்குபந்திபடியும், அதில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் கிழக்கு பக்கம் 83.6 மீட்டர் நீளமும், 20 அடி அகலமும், மேற்குபுறம் 83.4 மீட்டர் நீளமும், 20 அடி அகலமும் மொத்தம் 5380 சதுரடி நிலத்தை வாதி எனக்கு விற்ற நிலம் ஆகும். அதனை நான் வாதியிடம் இருந்து விலைக்கு வாங்கிய நாளிலிருந்து எனது

சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறேன். வாதி, நான் தாவா முதல் அயிட்ட சொத்தை அபகரிக்க முயல்வதாக கூறுவது உண்மைக்கு புறம்பானதாகும். மேலும் வாதி தனது தாவா பத்தி 5-ல் கூறியுள்ள அனைத்து சங்கதிகளையும் நான் மறுக்கிறேன். அதனை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேலும் வாதி எனக்கு 5380 சதுரடி நிலம் பத்திரத்தில் உள்ள அளவுபடியும், வரைபடம்படியும், செக்குபந்திபடியும் எனக்கு சொந்தமானது என்று கூறுவது சரி. மேலும் நான் முதல் அயிட்ட சொத்தை அபகரிக்க முயல்வதாகவும், அதில் உள்ள பயிர்களையும் சேதப்படுத்த முயன்றதாகவும், அதனை வாதியும் மற்றும் உள்ளூர் மனிதர்களின் துணையுடன் தடுத்து நிறுத்தியதாகவும் கூறியுள்ள சங்கதிகள் யாவும் ஏற்றுக்கொள்ள முடியாததும், பொய்யானதும் மற்றும் உண்மைக்கு புறம்பானதும் ஆகும். மேலும் விற்கிரய பத்திரப்படி எனக்கு 2-ம் அயிட்ட சொத்தை தவிர முதல் அயிட்ட சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், எனவே எனக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதி கோருவது சட்டத்திற்கு புறம்பானது ஆகும். உண்மையில் வாதி எனக்கு விற்பனை செய்த பத்திரத்தில் உள்ள நிலம் அளவுகள்படியும், வரைபடத்தில் உள்ளபடியும், செக்குபந்தியில் உள்ளபடியும் சொந்தமானது என்று கூறி தான் எனக்கு நிலத்தினை விற்பனை செய்தார். நான் 1-வது அயிட்ட சொத்தில் உரிமை கோருவதாக கூறுவது பொய்யானது ஆகும். நான் வாதியிடமிருந்து 2013-ம் ஆண்டு 2-ம் அயிட்ட தாவா சொத்தை விலைக்கு வாங்கிய பின் நான் எனக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்களை விற்ற சமயம் மேற்படி 2-ம் அயிட்ட வழக்கு சொத்தை வழி தடமாக காட்டியுள்ளேன். மேலும் பலருக்கு மேற்படி தாவா 2-வது அயிட்ட சொத்தை வழி தடமாக பாத்தியம் உள்ளது என குறிப்பிட்டு விற்பனையும், ஒப்பந்தமும் செய்துள்ளேன். தற்போது 7 வருடங்கள் கழித்து வேண்டுமென்றே வாதி பொய்யாக இந்த தாவாவை எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். இது காலம் கடந்து தாக்கல் செய்த வழக்கு ஆகும். மேலும் வாதி இந்த நீதிமன்றத்திற்கு சுத்தமான கரங்களுடன் வந்து வழக்கை தாக்கல் செய்யவில்லை. எனவே வாதி எனக்கு எதிராக உறுத்துக்கட்டளை

பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்ய அவருக்கு உரிமை இல்லை. மேலும் தாவாவில் இந்த தாவாவிற்கான எவ்வித வழக்கு மூலமும் ஏற்படவில்லை. மேலும் வாதி முறையான விளம்புகை பரிகாரமும் இந்த தாவாவில் கோரவில்லை மற்றும் தாவா நீதிமன்ற கட்டணம் முறையாக நீதிமன்ற கட்டண சட்டத்தின்படி செலுத்தவில்லை. மேலும் வாதிக்கு, எனக்கு விற்ற சொத்தில் எனக்கு எதிராக எவ்வித பரிகாரமும் இந்த தாவாவில் கோர முடியாது என்பதால் இந்த தாவாவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறார் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் பதிலுரையை ஆராய்ந்து கீழ்க்கண்ட வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1.	Whether the plaintiff is in actual physical possession of suit property?
2.	Whether the plaintiff is entitled for the relief of permanent injunction in respect of Item No.1 and Item No.2 property?
3.	Whether the plaintiff is entitled for the relief of permanent injunction in respect of remaining portion of item no.1 excluding 5380 sq.ft.?
4.	To what other relief the plaintiff is entitled for?

5. <u>வாதிகள் தரப்பு சாட்சியம் :</u>

இவ்வழக்கில் வாதிகள் தரப்பில், 2-ம் வாதி திருமதி. செல்வி அவர்கள் வழக்குரையை சார்ந்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து தன்னை வா.சா.1-ஆக விசாரித்துக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். வாதிகள் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக திரு. கணபதி என்பவர் வா.சா.2-ஆக விசாரித்துக்கொண்டு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வாதிகளுக்கு

சாதகமாக சாட்சியமளித்துள்ளார். வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் 9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. <u>பிரதிவாதி தரப்பு சாட்சியம் :</u>

இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி திரு. ஜெயகுமார் அவர்கள் பதிலுரையை சார்ந்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து தன்னை பி.சா.1-ஆக விசாரித்துக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். பிரதிவாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக திரு. தங்கராஜ் என்பவர் பி.சா.2-ஆக விசாரித்துக்கொண்டு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து பிரதிவாதிக்கு சாதகமாக சாட்சியமளித்துள்ளார். பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.1 முதல் 5 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7. வாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களானது 1-ம் வாதிக்கு 14.12.2009 தேதிய வா.சா.ஆ.1 கிரயப்பத்திரம் மூலமாக பாத்தியப்பட்டது என்றும், தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களானது மொத்த விஸ்தீரணம் 38 செண்டுகள் என்றும், மேற்படி தாவா 1, 2 அயிட்ட சொத்தில் 2-வது அயிட்ட சொத்தான 5380 சதுரடி நிலத்தை 1-ம் வாதி, பிரதிவாதிக்கு 01.04.2013-ம் தேதி ஆவண எண்.1883/2013-ன்படி விற்பனை செய்துள்ளதாகவும், பிரதிவாதிக்கு விற்பனை செய்யப்பட்ட நிலத்தின் அளவானது கிழமேலடி வடபுறம் 20, தென்புறம் 20, தென்வடலடி கிழபுறம் 268 அடி, மேற்குபுறம் 270 அடி ஆகும் என்றும், தாவா 1-வது அயிட்ட சொத்தில் மேற்படி பிரதிவாதிக்கு விற்பனை செய்த 5380 சதுரடியை தவிர மீதமுள்ள நிலத்தை 1-ம் வாதி அனுபவித்து வருவதாகவும், தாவா நிலத்தின் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டு, 120/1A1, 120/1A2 என வட்டாட்சியரால் பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும், பிரதிவாதிக்கு அவருக்கு விற்பனை செய்யப்பட்ட

நிலமான 5380 சதுரடியில் தான் உரிமை உள்ளது என்றும், தாவா 1-வது அயிட்ட சொத்தில் அவருக்கு உரிமையில்லை என்றும், ஆனால் 17.07.2020-ம் தேதி காலை 10 மணிக்கு பிரதிவாதி அவரது அடியாட்களுடன் வந்து தாவா 1-வது அயிட்ட சொத்தை சேதப்படுத்தி 2-வது அயிட்ட சொத்துடன் இணைக்க முற்பட்டதாகவும், மேற்படி விவரத்தை தெரிந்தகொண்டு 1-ம் வாதி தாவா 1-வது அயிட்ட சொத்திற்கு சென்றதாகவும், உள்ளூர் பொதுமக்களின் துணையோடு பிரதிவாதியின் ஆக்கிரமிப்பை முறியடித்ததாகவும், பிரதிவாதி 1-ம் வாதியின் நிலத்திலுள்ள சோளப்பயிரை சேதப்படுத்தியதாகவும், பிரதிவாதி வாதியிடம் மேலும் ஆட்களோடு வந்து தாவா 1-வது அயிட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்யப்போவதாக மிரட்டி சென்றதாகவும், அவ்வாறு செய்வதற்கு பிரதிவாதிக்கு தாவா 1-வது அயிட்ட சொத்தில் எவ்வித உரிமையோ, அனுபவமோ இல்லை என்றும், பிரதிவாதியின் செயலை நீதிமன்ற உத்தரவின் மூலம் தான் தடை செய்ய இயலும் என்றும், பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில், "முருகன் மீதம் வைத்துக்கொண்ட சொத்தில் தனக்கு எந்த உரிமையும் இல்லையென்றால் சரிதான், அதேபோல் முருகன் மீதம் வைத்துக்கொண்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்துகொள்ள தனக்கு உரிமையில்லை என்றால் சரிதான்" என்று கூறியுள்ளதாகவும், மேலும் "தனக்கு விற்ற சொ்தை தவிர வேறு சொத்தில் தனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரிதான்" என்று கூறியுள்ளதாகவும், வாதி தனது வழக்கை வா.சா.1 மற்றும் வாசா.2 சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 ஆவணங்கள் மூலமாக நிரூபித்துள்ளதாகவும், எனவே வழக்கை அனுமதித்து உத்தரவிட வேண்டுமென வாதிட்டார்.

8. பிரதிவாதி தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதிகள் வழக்குச்சொத்தின் 2-வது அயிட்ட சொத்தை பிரதிவாதிக்கு விற்பனை செய்தது ஒப்புக்கொண்டுள்ளதால் மேற்படி சொத்தில்

அவர்களுக்கு உரிமையுள்ளது என விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அது நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி 1, 2 அயிட்ட சொத்து குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்க எந்தவித ஆவணமும், ஆதாரமும் இல்லை என்பதால் முதல் வினாவிற்கு வாதிகளுக்கு எதிராக தீர்மானிக்க வேண்டியது அவசியமானது என்றும், வாதிகள் வழக்குரையின் சொத்து விவரத்தில் 1-வது அயிட்டத்தில் காட்டியுள்ள சொத்தின் செக்குபந்தி 38 செண்ட்க்கு உண்டானதாகும் என்றும், எனவே 1-ம் வாதி, பிரதிவாதிக்கு விற்பனை செய்த 5380 சதுரடி நீங்கலாக மீதமுள்ள சொத்திற்கு செக்குபந்தி குறிப்பிட்டு காட்டவில்லை என்றும், ஆகவே மேற்படி பரிகாரம் கோரமுடியாது என்றும், 5380 சதுரடி நிலத்தை தனது நிலத்திற்கு போவதற்காக வழிக்காக வாங்கியுள்ளார் என்றும், மேற்படி சொத்தில் பலருக்கு வழித்தடபாத்திய உரிமை கொடுத்துள்ளார் என்றும், இதை வாதிகள் ஒப்புக்கொள்ளுகின்றனர் என்றும், ஆனால் மறைமுகமாக பிரதிவாதிக்கு தொந்தரவு கொடுக்க வேண்டும் என்பதற்காக பிரதிவாதி 1-வது அயிட்ட சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தார் என பொய்யாக கூறுகின்றனர் என்றும், பிரதிவாதி சொத்தை வாங்கியதையும், பலருக்கு வழித்தடபாத்தியம் கொடுத்தது குறித்தும் கீழ்கண்ட விதத்தில் ஒப்புக்கொள்ளுகிறார் என்றும், 1-ம் வாதி பிரதிவாதிக்கு தாவா 2-வது அயிட்ட சொத்தை விற்பனை செய்ததை வாதிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்றும், தாவா 2-ம் அயிட்ட சொத்து விவரம் a) மேற்படி சர்வே எண்ணில் தனது மீதி நிலத்திற்கும் கிழக்கு, b) சர்வே எண்.120/1 பி நாராயண படையாச்சி நிலத்திற்கும் மேற்கு, கிழமேல் ரோட்டிற்கும் தெற்கு, மா.முத்தம்மாள் நிலத்திற்கும் வடக்கு இதன் மத்தியில் கிழமேலடி வடபுறம் 20, தென்புறம் 20, தென்வடலடி கிழபுறம் 268 அடி, மேற்குபுறம் 270, இந்தளவுள்ள 5380 சதுரடிகள் விஸ்தீரணம் கொண்ட காலியிடம் முழுவதும் மற்றும் இதற்குரிய மாமூல் தடவழியில் ஆட்கள், கால்நடைகள், வண்டி வாகனங்கள் போகவர தடவழி பாத்தியங்களும் மூல ஆவணத்தில்

கண்டுள்ளவாறு தடவழி உரிமை உள்ளிட்ட சகல உரிமைகளும் மற்றும் கிரய சொத்திற்குண்டான சகல சுதந்திரங்களும் ஈஸ்மெண்ட் பாத்தியங்களும் சேர்ந்து இதற்கு உட்பட்டது என்றும், இத்துடன் இச்சொத்தினை காட்டும் மாதிரி வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றும், வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், எனது கணவர் பிரதிவாதிக்கு நிலத்தை விற்றுவிட்டு அந்த நிலத்தில் போகவர வழித்தட பாத்தியம் கேட்டு அது சம்மந்தமாக வழித்தட ஒப்பந்தம் எங்களுக்குள் எழுதப்பட்டது என்றால் சரிதான் என்று ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி கிரய ஆவணத்தில் செக்குபந்திகள் நான்கு எல்லைக்கும் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என ஒப்புக்கொள்ளுகிறார் என்றும், எனது கணவர் பிரதிவாதிக்கு கொடுத்த வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தில் அதன் சொத்தை பொறுத்து வரைபடம் வரைந்து பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் உள்ளது என ஒப்புக்கொள்ளுகிறார் என்றும், வா.சா.ஆ.2 ஆவணத்தில் என்ன செக்குபந்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், நாராயண படையாச்சி நிலத்திற்கும் மேற்கு, எனது மீதி நிலத்திற்கும் கிழக்கு, கிழமேல் ரோட்டிற்கும் தெற்கு, முத்தம்மாள் நிலத்திற்கும் வடக்கு என பி.சா.ஆ.1-ல் உள்ளதை ஒப்புக்கொள்ளுகிறார் என்றும், 2-ம் அயிட்ட சொத்தில் குறிப்பிட்டுள்ள செக்குபந்தி விவரம் சரியானதா என்றால் சரியானது என ஒப்புக்கொள்ளுகிறார் என்றும், பிரதிவாதி, முத்தம்மாள் என்பவருக்கும் தடபாத்தியம் கொடுத்தது தெரியும் என்றால் சரிதான் என ஒப்புக்கொள்ளுகிறார் என்றும், அது பி.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், முத்தம்மாள் நிலம் எனது அருகில் உள்ள நிலம் என்றால் சரிதான் என்றும், தற்சமயம் இரு நிலத்திற்கும் இடையில் பிரதிவாதி நிலம் உள்ளது என்றும், அந்த பிரதிவாதி நிலத்தின் வழியாக தான் சென்று வருகிறார்கள் என்றால் சரிதான் என ஒப்புக்கொள்ளுகிறார் என்றும், என்னிடம் காட்டப்படும் ஆவணம் பூபாலன் என்பவருக்கு பிரதிவாதி வழித்தடம் எழுதிக்கொடுத்ததற்கான தடபாத்திய ஒப்பந்தப்பத்திரம் என்றால் சரி என்றும், எனது கணவரிடம் நிலம் வாங்கி பிரதிவாதி அதைப்பொறுத்து வழித்தடபாத்தியம்

கொடுத்தவர்கள் அந்த நிலத்தை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான் என்றும், 2-ம் அயிட்ட சொத்துதான் வாதி, பிரதிவாதிக்கு விற்ற சொத்தாகும் என்றும், தங்கராஜ் என்பவருக்கும் பிரதிவாதி வழித்தடம் எழுதிக்கொடுத்தது சம்பந்தமாக எனக்கு தெரியும் என்றால் சரிதான் என ஒப்புக்கொள்ளுகிறார் என்றும், வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3-ல் எங்கள் நிலத்தை ஒட்டி யார் யாருக்கும் நிலம் உள்ளது என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், எனக்கு தெரியவில்லை என்று கூறுகிறார் என்றும், ஆகவே 1-ம் வாதி விற்பனை செய்த 5380 சதுரடி பொறுத்து சொத்துப்பத்திரத்தில் உள்ள அளவுபடியும், செக்குபந்திபடியும் அதில் இணைத்துள்ள வரைபடத்தில் உள்ளதுபடியும் உள்ள சொத்தை தவிர்த்து 1-வது அயிட்ட சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்புசெய்ய முயற்சி செய்தார் என நிரூபிக்கவில்லை என்பதால் 2-வது வினாவிற்கு வாதிக்கு எதிராக தீர்மானிக்க வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், மேற்படி வழக்கில் பிரதிவாதி பலருக்கு பல ஆவணங்கள் வழியாக (பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2, பி.சா.ஆ.3 மற்றும் பி.சா.ஆ.5) வழித்தடம் எழுதிக்கொடுத்தது தெரிந்திருந்தும் அதை அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என ஒப்புக்கொண்ட பின்பும் மேற்கண்ட நபர்களை வழக்கின் நபர்களாக சேர்க்கவில்லை என்பதும் சொத்தை விற்று 7 வருடங்கள் ஆன பின் எந்தவித முகாந்திரமும் இல்லாமல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேலும் வாதிகளுக்கு 1, 2 பரிகாரங்கள் எதிராக உள்ளதால் இதர பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என கனம் நீதிமன்றம் முடிவு செய்து செலவுத்தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்று வாதிட்டார்.

9. இரு தரப்பு வாதம் மற்றும் வழக்கு ஆவணங்கள், சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டன.

10. <u>எழுவினா **1-**க்கான தீர்வு **:**</u>

Whether the plaintiff is in actual physical possession of suit property?

1) தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களானது 1-ம் வாதிக்கு 14.12.2009 தேதிய வா.சா.ஆ.1 கிரயப்பத்திரம் மூலமாக பாத்தியப்பட்டது என்றும், தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களானது மொத்த விஸ்தீரணம் 38 செண்டுகள் என்றும், மேற்படி தாவா 1, 2 அயிட்ட சொத்தில் அதாவது 2-வது அயிட்ட சொத்தான 5380 சதுரடி நிலத்தை 1-ம் வாதி, பிரதிவாதிக்கு 01.04.2013-ம் தேதி ஆவண எண். 1883/2013-ன்படி விற்பனை செய்துள்ளதாகவும், பிரதிவாதிக்கு விற்பனை செய்யப்படட நிலத்தின் அளவானது கிழமேலடி வடபுறம் 20 தென்புறம் 20, தென்வடலடி கிழபுறம் 268 அடி, மேற்குபுறம் 270 அடி ஆகும் என்றும், தாவா 1-வது அயிட்ட சொத்தில் மேற்படி பிரதிவாதிக்கு விற்பனை செய்த 5380 சதுரடியை தவிர மீதுமள்ள நிலத்தை 1-ம் வாதி அனுபவித்து வந்ததாகவும், மேற்படி நிலத்தின் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டு, 120/1A1. 120/1A2 என் வட்டாடட்சியரால் பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் தாவா 2-வது அயிட்ட சொத்தை 2013-ம் வருடம் 1-ம் வாதியிடமிருந்து கிரயம் பெற்று அனுபவித்து வந்ததாகவும், பின் தனக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்களை விற்ற சமயம் 2-ம் அயிட்ட வழக்குச்சொத்தை வழித்தடமாக காட்டியுள்ளதாகவும், 2-ம் அயிட்ட சொத்தை தானும், தன்னிடமிருந்து கிரயம் பெற்றவர்களும் அனுபவித்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. 1-வது அயிட்ட சொத்தில் உரிமை கோருவதாக கூறுவது பொய்யானதாகும் என்று கூறப்பட்டுள்ளது.

2) வா.சா.1 தனது சாட்சியத்தில், தாவா சொத்துக்கள் தனக்கு வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாக பாத்தியப்பட்டது என்று சாட்சியமளித்தும், தாவா சொத்தின் ஒரு பகுதியை பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக கிரயம் செய்து கொடுத்துள்ளதாகவும், தாவா சொத்தானது ஆதியில் ராமன் படையாச்சி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு வா.சா.ஆ.3 ஆவணம்

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி ஆவணத்தில் ச.எண்.120/1A என்பது ச.எண்.120/1A1 என பிரிக்கப்பட்டு 1-ம் வாதி பெயரிலும் மற்றும் ச.எண்.120/1A2 பிரதிவாதி பெயரிலும் அடங்கல் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. ச.எண்.120/1A1 நிலத்தில் 1-ம் வாதி தார்ஸ் வீடு, ஆழ்துறை கிணறு ஒன்று அமைத்து அதில் விவசாயம் செய்து வருவது வா.சா.ஆ.4 சாகுபடி அடங்கல் மூலமாக தெரியவருகிறது. மேலும் வாழப்பாடி வட்டம் அ.நா.மங்களம் கிராம நிர்வாக அலுவலர் ச.எண்.10/1A1-ல் 0.10.5 புஞ்.ஹெக் கொண்ட நிலம் பூராவும் 1-ம் வாதிக்கு பாத்தயிப்பட்டது என்றும், மேற்படி சர்வே எண்ணிற்கு பசலி 1428-க்கு நிலவரி பாக்கி இல்லை எனவும் சான்றிதழ் வழங்கியுள்ளது தெரியவருகிறது. எனவே தாவா 1-வது அயிட்ட சொத்தில் பிரதிவாதிக்கு விற்ற 5380 சதுரடி நீங்கலாக மீதமுள்ள நிலமானது வாதிகளின் அனுபவத்தில் இருப்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேற்படி தாவா 1-ம் அயிட்ட சொத்தில் 5380 சதுரடி நிலத்தில் பிரதிவாதி 1-ம் வாதியிடம் 2013-ம் வருடம் கிரயம் பெற்றுள்ளதால் தாவா 2-ம் அயிட்ட சொத்தை 1-ம் வாதி அனுபவம் செய்யவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் வாதிகள் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேலும் பிரதிவாதியும் தனக்கு பாத்தியப்பட்ட 1-ம் அயிட்ட சொத்தில் மேற்படி 5380 சதுரடியை தவிர இதர பகுதியில் உரிமை கோரவில்லை. எனவே வாதிகள் தாவா 1-ம் அயிட்ட சொத்தில் பிரதிவாதிக்கு விற்பனை செய்த 5380 சதுரடி போக மீத நிலத்தில் அனுபவத்தில் இருப்பது வா.சா.1-ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் 7 ஆவணங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. <u>எழுவினாக்கள் **2** மற்றும் **3-**க்கான தீர்வு **:**</u>

Whether the plaintiff is entitled for the relief of permanent injunction in respect of Item No.1 and Item No.2 property?

Whether the plaintiff is entitled for the relief of permanent injunction in respect of remaining portion of item no.1 excluding 5380 sq. ft.?

1) வாதிகள் தாவா 1-வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதியான 2-வது அயிட்ட சொத்தை தவிர மீதமுள்ள சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளார்கள். பிரதிவாதி தனது எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணையிலேயே நான் 1-வது அயிட்ட சொத்தில் உரிமை கோருவதாக கூறுவது பொய்யானதாகும் என்று கூறியுள்ளார். வா.சா.1 தனது வழக்குரை மற்றும் சாட்சியத்தில், பிரதிவாதி திடீரென்று அடியாட்களுடன் கடந்த 17.07.2020-ம் காலை 10 மணிக்கு தாவா முதல் அயிட்ட சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கத்தில் எங்களது நிலத்தை சேதப்படுத்தினார், மேலும் தாவா 2-வது அயிட்ட சொத்துடன் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்தார் என்றும் கூறியுள்ளார். பி.சா.1 தனது சாட்சியத்தில் நான் முதல் அயிட்ட சொத்தை அபகரிக்க முயல்வதாகவும், அதிலுள்ள பயிர்களையும் சேதப்படுத்த முயன்றதாகவும், அதனை வாதியும் மற்றும் உள்ளூர் மனிதர்களின் துணையுடன் தடுத்து நிறுத்தியதாகவும் கூறியுள்ள சங்கதிகள் யாவும் ஏற்றுக்கொள்ள முடியாததும், பொய்யானதும் மற்றும் உண்மைக்கு புறம்பானதும் ஆகும் என்று கூறியுள்ளார். வா.சா.1 சாட்சியத்தை பரிசீலனை செய்தபோது பிரதிவாதி தாவா 1-வது அயிட்ட சொத்தில் 2-ம் அயிட்ட சொத்தை தவிர மீதமுள்ள பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து அதை 1-வது அயிட்ட சொத்தோடு இணைக்க முற்பட்டதாக கூறியுள்ளார். ஆனால் அதை பிரதிவாதியான பி.சா.1 மறுத்துள்ளார். வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.6-ஆக இரண்டு புகைப்படங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அதற்குரிய குறுந்தகடும் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. மேற்படி 2 புகைப்படங்களும் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி 2 புகைப்படத்தையும் பார்வையிடும்போது விவசாய பயிர் பாதையின் ஓரத்தில் சேதப்படுத்தப்பட்டுள்ள விவரம் தெரியவருகிறது. ஆனால் மேற்படி விவசாய பயிரானது பிரதிவாதியால் சேதப்படுத்தப்பட்டதாக வா.சா.1 கூறியுள்ள நிலையில், மேற்படி சங்கதியை உறுதியூட்டுவதற்கு வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.2 தனது சாட்சியத்தில் மேற்படி பிரதிவாதி ஜெயக்குமார் தான் வாங்கிய 5380 சதுரடி நிலத்துடன் 1-ம் வாதி முருகனுக்கு பாத்தியப்பட்ட மீதி நிலத்தை தன் நிலத்துடன் சேர்க்க கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு முயற்சி செய்ததால் மேற்படி S.P.முருகன் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்று கூறியுள்ளார். எனவே பிரதிவாதி தாவா 1-வது அயிட்ட சொத்தில் தான் கிரயம் பெற்ற 5380 சதுரடி நிலத்தை தவிர மீதமுள்ள நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டது தெரியவருகிறது. மேற்படி தாவா 1-வது அயிட்ட சொத்தில் 5380 சதுரடி நிலத்தை தவிர பிரதிவதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஏற்கனவே 1-வது எழுவினாவில் தாவா 1-வது அயிட்ட சொத்தில் மேற்படி 5380 சதுரடி நிலத்தை தவிர மீதி நிலமானது வாதிகள் அனுபவத்தில் இருப்பதாக முடிவு காணப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் விளம்புகை பரிகாரம் கேட்காமல் இந்த தாவாவில் வாதி தனக்கு விற்ற சொத்தில் தனக்கு எதிராக எவ்வித பரிகாரமும் தாவாவில் கோர முடியாது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென கூறப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாக வாதிகள் 1-ம் அயிட்ட சொத்தில் தங்களுக்குள்ள உரிமையை எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் பிரதிவாதியே தாவா 2ம் அயிட்ட சொத்தை 1 ஆம் வாதியிடம் தான் கிரயம் பெற்றுள்ளார். எனவே தாவா 1 அயிட்ட சொத்தில் பிரதிவாதிக்கு விற்பனை செய்யப்பட்ட 5380 சதுரடி நிலத்தை தவிர மீதமுள்ள

நிலத்தை வாதிகளின் உரிமையானது பிரதிவாதியால் குறிப்பிட்டு மறுக்கப்படவில்லை. எனவே வாதியின் உரிமையானது, தாவா 1வது அயிட்ட சொத்தில் எவ்வித சந்தேகத்திற்கும் உள்ளாக்கப்படவில்லை. எனவே தாவா 1 அயிட்ட சொத்தில் மேற்படி 5380 சதுரடி நிலத்தை தவிர வாதிகளுக்கே உரிமை உள்ளதால், விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் தாவா 1வது அயிட்ட சொத்தில் செக்குபந்தி விவரத்தில் முழுசொத்தையும் உள்ளடக்கி செக்குபந்தி விவரம் காட்டப்பட்டுள்ளதாக பிரதிவாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி தாவா 1வது அயிட்ட சொத்து விவரத்தில், வாதிகள் தரப்பில் தெளிவுற " மேற்படி சொத்தில் பிரதிவாதிக்கு விற்ற 5380 சதுரடிகள் நீங்கலாக மீதமுள்ள 25.65 செண்டு நிலத்திற்கு தான் தடை உத்தரவு கோரி தாவா என்று தெளிவுற குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிக்கு விற்கப்பட்ட சொத்திற்கு செக்குபந்தி விவரமும், அளவுகளும் தாவா 2வது அயிட்ட சொத்து விவரத்தில் தெளிவுற குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தாவா 1-வது அயிட்ட சொத்தை அடையாளம் காண்பதில் எவ்வித சந்தேகமும் எழுவதற்கு வாய்ப்பில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வாதிகள் தரப்பில் வா.சா. 1 மீண்டும் மனுவில் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, வா.சா.ஆ. 7 மற்றும் வா.சா.ஆ. 8 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 8 ஆவணமான வாழப்பாடி வட்டாட்சியரின் பட்டா மாறுதல் உத்தரவும், 04.03.2026 தேதிய பட்டாவின் இணைய நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தங்களது வழக்குரை மற்றும் சாட்சியத்திலேயே 1வது வாதி பிரதிவாதிக்கு விற்பனை செய்த 5380 சதுரடி நிலத்தில் தங்களுக்கு எந்த உரிமையோ, அனுபவமோ இல்லை என தெரிவித்துள்ளதால் வாதிகளுக்கு

தாவா 2 வது அயிட்ட சொத்தை பொருத்து நிரந்தர உறுத்தகட்டளை பரிகாரம் கிடைக்கதக்கதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அதேபோல், தாவா 1 வது அயிட்ட சொத்தில் 1ம் வாதி, பிரதிவாதிக்கு விற்பனை செய்த 5380 சதுரடியில் மட்டும் தான் பிரதிவாதி தனக்கு உரிமையும் அனுபவமும் இருப்பதாகவும், 1 அயிட்ட சொத்தில் மேற்படி 5380 சதுரடி தவிர மீதமுள்ள நிலத்தில் தனக்கு உரிமையோ, அனுபவமோ இல்லை என கூறியுள்ள நிலையில் தாவா 1 வது அயிட்ட சொத்தில் மேற்படி 5380 சதுரடி தவிர மீதமுள்ள நிலத்தை பொருத்து வாதிகள் தங்களுக்கு பாத்தியப்பட்டு, தங்களது அனுபவத்தில் இருப்பதை தங்களது சாட்சியம் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார்கள் என ஏற்கனவே 1-வது எழுவினாவிற்கு முடிவு காணப்பட்டுள்ளது. மேலும் தாவா 1 வது அயிட்ட சொத்தில் பிரதிவாதியின் 5380 சதுரடி நிலத்தை தவிர மீதமுள்ள பகுதியில் பிரதிவாதி, வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்ய முற்பட்டதையும் தகுந்த சாட்சியம் மற்றும் ஆவணங்கள் மூலமாக நிரூபித்துள்ளார்கள். இவ்வழக்கில் முதல்நிலை வழக்கும், சமநிலை சம வாய்ப்பும் வாதிகளுக்கு சாதகமாக உள்ளது. தாவா 1 வது அயிட்ட சொத்தில் பிரதிவாதிக்கு விற்பனை செய்த 5380 சதுரடி நிலத்தை தவிர மீதமுள்ள நிலத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்போ, இடையூறோ செய்ய முற்பட்டால் அது வாதிகளுக்கு அளவிடமுடியாது இழப்பீட்டை ஏற்படுத்தும், எனவே அதை இந்நீதிமன்ற உத்தரவின் மூலம் தான் தடை செய்ய முடியும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, தாவா 1 வது அயிட்ட சொத்தில் பிரதிவாதிக்கு விற்பனை செய்யப்பட்ட 5380 சதுரடி நிலத்தை தவிர மீதமுள்ள நிலத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ, வேலையாட்களோ வாதியின் அனுபவத்திற்கு எவ்வித இடையூறும்,

ஆக்கிரமைப்பு செய்ய கூடாது என நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

12. <u>எழுவினா**4-**க்கான தீர்வு **:**</u>

To what other relief the plaintiff is entitled for?

இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, வாதிகளுக்கு இவ்வழக்கில் வேறு எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. செலவு தொகை இல்லை.

13. இறுதியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வாதிகள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது அனுமதிக்கப்படுகிறது. முடிவில், இவ்வழக்கு தாவா 1வது அயிட்ட சொத்தில் பிரதிவாதிக்கு விற்பனை செய்யப்பட்ட 5380 சதுரடி நிலத்தை தவிர மீதமுள்ள நிலத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ, வேலையாட்களோ வாதிகளின் அனுபவத்திற்கு எவ்வித இடையூறும், ஆக்கிரமைப்பும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்துத்தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 22-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate,
Digitally signed by SHANMUGANATHAN
Location: Vazhapadi.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
வாழப்பாடி.

<u>பிற்சேர்க்கை</u> :

1. <u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u> :

வா.சா.1 திருமதி. செல்வி (2-ம் வாதி)

வா.சா.2 திரு. கணபதி

2. <u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :</u>

பி.சா.1 திரு. ஜெயகுமார் (பிரதிவாதி)

பி.சா.2 திரு. தங்கராஜ்

3. <u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :

வா.சா.ஆ.1	14.12.20091ம்வாதி பெயருக்கு ராமன் (எ) ராமசாமி எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.2	01.04.2013 1ம் வாதி பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.3	19.02.2020 கிராம நிர்வாக அலுவலர், AN மங்களம் வழங்கிய FMB உண்மை நகல்
வா.சா.ஆ.4	19.02.2020 தாவா சொத்திற்கு உண்டான அடங்கல் உண்மை நகல்
வா.சா.ஆ.5	19.02.2020 கிராம நிர்வாக அலுவலர், AN மங்களம் வழங்கிய சான்றிதழ்கள் உண்மை நகல்
வா.சா.ஆ.6	தாவா சொத்துக்களை காட்டும் புகைகப்படம் அசல்
வா.சா.ஆ.7	தாவா சொத்தை காட்டும் குறுந்தகடு அசல்

4. <u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :

பி.சா.ஆ.1	01.04.2013 அன்று முருகன் மற்றும் ஜெயகுமார் என்பவர்களால் எழுதப்பட்ட தடபாத்திய ஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.2	06.11.2013 அன்று ஜெயகுமார் மற்றும் முத்தம்மாளுக்கும் இடையே எழுதப்பட்ட தடபாத்திய ஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல்

பி.சா.ஆ.3	06.11.2013 அன்று ஜெயகுமார் மற்றும் பூபாலனுக்கு இடையே எழுதப்பட்ட தடபாத்திய ஒப்பந்தப்பத்திரத்தின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.4	12.10.2024 தேதியிட்ட 01.08.1983 முதல் 11.10.2024 வரையிலான வில்லங்க சான்றிதழ் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.5	18.11.2013 தேதியிட்ட ஆவண எண்.5648/2013 தட பாத்திய ஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல்

நீதிமன்ற சாட்சிகள் : இல்லை

நீதிமன்ற சான்றாவணங்கள் : இல்லை

SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate,
Digitally signed by SHANMUGANATHAN
Location: Vazhapadi.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,

வாழப்பாடி.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்
நீதிமன்றம், வாழப்பாடி.
தீர்ப்புரை
அ.வ.எண்.**48/2020**
நாள் **: 22.07.2026**
அசல் / வரைவு

<u>அசல் வழக்கு எண் **48/2020**</u>

<u>நாள் **: 22.07.2026 :**</u> தீர்ப்புரை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது. இறுதியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வாதிகள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது அனுமதிக்கப்படுகிறது. முடிவில், இவ்வழக்கு தாவா 1வது அயிட்ட சொத்தில் பிரதிவாதிக்கு விற்பனை செய்யப்பட்ட 5380 சதுரடி நிலத்தை தவிர மீதமுள்ள நிலத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ, வேலையாட்களோ வாதிகளின் அனுபவத்திற்கு எவ்வித இடையூறும், ஆக்கிரமைப்பும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

SHANMUGANATHAN

District Munsif cum
Judicial Magistrate,
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Vazhapadi.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், வாழப்பாடி.